Press Release No: 860

Date: 14/10/08

# தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தின் 2–வது கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமையில் 14.10.2008 அன்று தொழிலாளர் நலவாரியக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தொழிலாளர் ஆணையர் திரு.அசுகுமாரன், நிதித்துறை இணைச் செயலர், தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நலவாரியச் செயலர், திரு.பலராமன், வேலையளிப்போர் பிரதிநிதிகளான திரு.கோபாலகிருஷ்ணன், திரு.ஜவஹர்லால், திரு.அருள்பிரகாசம், திரு.மணிகண்டன் மற்றும் தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகளாக திரு. ஷண்முகம், திரு.பழனிவேலு, திரு. திருநாவுக்கரசு, திரு. துரைசாமி, திரு.தஞ்சைமதி மற்றும் திரு.என். சம்பத் , ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவித் தொகைகள் உடனுக்குடன் வழங்குவது தொடர்பாகவும் இவ்வாரியத்தை திறம்பட செயல்படுத்துவது தொடர்பான வழிமுறைகள் குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் து...**
**தலைமைச் செயலகம், சென்...**